02-11-1991

# ஆனையிறவு 'ஷெல்'லினால் பிரயாணிகள் அவதி!

விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 33 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஐப்பசி 16 இதழ்: 263
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 02-11-1991

[காங்கேசன்துறை]
ஆனையிறவு இராணுவ முகாமிலிருந்து நேற்றுக்காலை ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதால் கொழும்பிலிருந்துவந்த பிரயாணிகள் பெரிதும் பாதிக்கப்பட்டனர்.
[3ம் பக்கம் பார்க்க]

## அராலி பகுதியிலிருந்து மக்கள் இடம்பெயர்வு

[யாழ்ப்பாணம்]
தீவுப்பகுதியில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர் அராலிப் பகுதியை நோக்கி கனத்த ஷெல் தாக்குதல்களை நேற்று முன்தினம் நடாத்தினர்.
இத்தாக்குதலினால் அராலிப்
(4-ம் பக்கம் பார்க்க)

## தெரிவுக் குழுவில் 43 அங்கத்தவர்

(கொழும்பு)
நாட்டில் அமைதியும் சமாதானமும் ஏற்படுத்தும் வழிமுறைகள் குறித்து ஆராயும் முகமாக 43 நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட தெரிவுக்குழு ஒன்று அமைக்கப்படவுள்ளது.
இக்குழு அமைக்கும் சாத்தியம் குறித்து ஆராயும்படி சபைமுதல்வர் திரு. ரணில் விக்கிரமசிங்க சபாநாயகரைக் கேட்டுள்ளார்.
[3-ம் பக்கம் பார்க்க]

# ★ சபாநாயகருக்கு எதிரான 2-வது பிரேரணையை எதிரணி நாடாளுமன்றில் கையளித்தது

[கொழும்பு]
சபாநாயகர் அல்ஹாஜ் எம். எச். முகம்மதுவுக்கு எதிராக மற்றுமொரு நம்பிக்கையில்லாப் பிரேரணையை எதிர்க்கட்சிகள் நேற்று முன்தினம் நாடாளுமன்ற செயலாளர் நாயகத்திடம் கையளித்தன.
ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி உட்பட நான்கு கட்சிகள் ஒன்றாக இணைந்து இந்தப் பிரேரணையை சமர்ப்பித்துள்ளன.

எதிர்க்கட்சிகளின் எதிர்ப்பு மன்றத்தில் 58 சட்டமூலங்கள் நாடாளு மன்றில் நிறைவேற்றப்பட்டதை எதிர்த்தே இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.
ஜனாதிபதி திரு. ஆர். பிரேம
(3-ம் பக்கம் பார்க்க)

## மருந்துலொறிகள் கொழும்பில் தேக்கம்

(யாழ்ப்பாணம்)
யாழ். போதனா வைத்தியசாலைக்குத் தேவையான மருந்துவகைகளையும் மற்றும் பொருள்களையும் கொண்டுவருவதற்காக யாழ். போதனா வைத்தியசாலையிலிருந்து குழுவொன்று கடந்த மாதம் கொழும்பு சென்றது.
வடபகுதிக்கான பிரதான பாதைப் போக்குவரத்து துண்டிக்கப்பட்டுள்ளதனால் லொறியுடன் பொருள்கள் யாழ். போதனா வைத்தியசாலைக்கு வந்து சேர்வதில் தற்போது தாமதம் ஏற்பட்டுள்ளதெனத் தெரிவிக்கப்படு
(3ம் பக்கம் பார்க்க)

## முப்படையினரும் உஷார் நிலையில்

[கொழும்பு]
'சார்க்' மாநாடு நடைபெறும் காலத்தில் நாடு முழுவதிலும் முப்படைகளும் உஷார் நிலையில் வைக்கப்படுமென பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.
குறிப்பாக கொழும்பு மாநகரப் பகுதியெங்கும் சுமார் 15,000 படையினர் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.
கொழும்பில் பல பகுதிகளி
[4ம் பக்கம் பார்க்க]

### மட்டு - அம்பாறையில்

## அகதி முகாம்களுக்கு தடை மக்கள் காடுகளில் தஞ்சம்

[மட்டுநகர்]
மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களிலுள்ள அகதிகள் முகாம்களுக்கு அரசு தற்போது தடைவிதித்துள்ளது.
மேற்படி மாவட்டங்களில் உள்ள அகதிகள் முகாம்களில் தங்கியிருந்த தமிழ்மக்கள், இராணுவத்தினராலும், சமூக
(4ம் பக்கம் பார்க்க)

### வவுனியாவில்

## 65 கிராம சேவகர் பிரிவு புலிகளின் கட்டுப்பாட்டில்

[வவுனியா]
வவுனியாவிலுள்ள நூறு கிராமசேவகர் பிரிவில் சுமார் 65 கிராமசேவகர் பிரிவு விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.
35 கிராம சேவகர் பிரிவுகள் மாத்திரமே படையினரின் கட்டுப்பாட்டில் இருப்பதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.
மேற்படி 85 கிராம சேவகர் பிரிவில் பெருமளவு சிங்கள மக்கள் வாழும் பகுதியே என்பதும் குறிப்பிடத்தக்கது. (இ)

## பாணின் விலை 7 ரூபா 50 சதம்

(யாழ்ப்பாணம்)
இன்றுமுதல் ஒரு இறாத்தல் பாண் 7 ரூபா 50 சதமாக விற்கப்படவேண்டுமெனவும் அதன் நிறை 350 கிராமுக்கு
(4ம் பக்கம் பார்க்க)

## இராணுவம்மீது ஷெல்வீச்சு

(யாழ்ப்பாணம்)
பூநகரிப்பகுதியிலுள்ள ஆனைச் சந்தியில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர்மீது விடுதலைப் புலிகள் நேற்றுமுன்தினம் ஷெல்தாக்குதல்களை மேற்கொண்டனர். இராணுவத்தரப்பில் பலத்த சேதம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (வி)

## இராணுவ தளபதியாக வைத்தியரத்ன நியமனம்

[கொழும்பு]
இலங்கை இராணுவ தளபதியாக கிழக்கு மாகாண இராணுவ தளபதி மேஜர் ஜெனரல் சிசில் வைத்தியரத்ன நியமிக்கப்படவுள்ளார்.
தற்போதைய இராணுவத் தளபதி லெப். ஜெனரல் ஹமில்டன் வனசிங்க பதவி உயர்வுபெற்றுச் செல்வதைய டுத்தே இராணுவ தளபதியாக இவர் வைத்தியரத்ன நியமிக்கப்படவுள்ளார்.
இப்பதவிக்கு வடபகுதி இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ
(4-ம் பக்கம் பார்க்க)

## அடகுநகைகளை கொழும்பில் மீளப்பெற நடவடிக்கை

[கொழும்பு]
வடபகுதியில் மக்கள் வங்கி கிளையில் நகைகளை அடகு வைத்தோர் தற்போது அவற்றை கொழும்பில் மீளப் பெற்றுக்கொள்ள மக்கள் வங்கி ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது.
இதற்கென மருதானை மக்
4-ம் பக்கம் பார்க்க)

## 12 ஆயிரம் பேர் உயிரிழப்பு

(லண்டன்)
இலங்கையில் ஏற்பட்டுள்ள உள்நாட்டுப் போரில் 1990ம் ஆண்டிலிருந்து இதுவரை 12 ஆயிரம் பேர் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (வி)

## ஹமில்டன் பதவி உயர்வு

[கொழும்பு]
இராணுவத் தளபதி லெப். ஜெனரல் ஹமில்டன் வனசிங்க பதவி உயர்வுபெற்று கூட்டுப் படை தலைமையகம் செல்கிறார்.
ஹமில்டன் வனசிங்க கூட்டு நடவடிக்கை பொது ஆணை அதிகாரியாக விரைவில் பதவி ஏற்கவுள்ளார்.
ஏற்கனவே ஜெனரல் ஹமில்டன் வனசிங்கவின் பதவிக்காலம் முடிவடைந்தபோதும் இவருக்கு ஜனாதிபதி பதவிக்காலத்தை நீடித்ததுடன் பதவி உயர்வும் வழங்கியுள்ளார். (இ)

## இரு அமைச்சர்கள் மட்டுநகர் விஜயம்

(யாழ்ப்பாணம்)
மட்டக்களப்பு மாவட்டத்திற்கு எதிர்வரும் டிசம்பர் மாதம் இரு அமைச்சர்கள் விஜயம் செய்யவுள்ளனர்.
(4-ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### மீண்டும் சனிமாற்றம்

(28-10-91) சனிமாற்றம் வாக்கியப்படி ரூபா 7/-எல்லா ராசிகளின் பலன்கள் எங்கும் விற்பனையாகின்றன சோபிதா யாழ்ப்பாணம். (சி-5538)

### விற்பனைக்கு

நல்ல இன அல்சேசன் நாய்க் குட்டிகள் விற்பனைக்குண்டு (கறுப்பு). பூசி ஏற்றப்பட்டவை. வரதன் சைக்கிள் கடை, அரசடி, நவாலி. (சி-5556)

### ஆங்கிலக் கல்வி

இளைப்பாறிய அரசாங்க உத்தியோகத்தினால், சகல தரப்பினருக்கும் ஆங்கிலம் ஆரம்ப அறிவிலிருந்து தனிப்பட்ட முறையிலும் உங்கள் வீடுகளுக்கு வந்தும் கற்பிக்கப்படும். தொடர்பு நேரம். சனி ஞாயிறு காலை 11.00 - 12.00 மணி. S. ஜெயராசா, 204, மானிப்பாய் றோட், ஓட்டுமடம், யாழ்ப்பாணம். (சி 5312)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

### சித்த மருத்துவமும் அறுவை மருத்துவமும்

### கல்வி ஆண்டு 1990/91

மேற்படி பயிற்சி நெறியிலுள்ள 2ம், 3ம், 4ம், 5ம் வருட மாணவர்களுக்கான புதிய கல்வி ஆண்டு 04-11-1991 ஆரம்பமாகும்.

பதிவாளர்
(ஏ 1689)

### தொண்டர் காப்பக கூட்டம்

(யாழ்ப்பாணம்)

அறவழி தொண்டர் காப்பக பொதுக் கூட்டம் இன்று காலை திருமதி வனிதா துரைசிங்கம் தலைமையில் சாந்தி நிலையமதில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் காப்பகத்தின் வேலைத்திட்டம் தொடர்பாக ஆராயப்படும்.

### உதைபந்தாட்ட இறுதிப்போட்டி

(யாழ்ப்பாணம்)

மேஜர் ஜாகி ஞாபகார்த்த கிண்ண 7 பேர் கொண்ட உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டி இன்று மாலை 3. 30 மணியளவில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயா கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இறுதிப் போட்டியில் தெல்லிப்பழை பன்னாலை கணேசன் அணியை எதிர்த்து ஈவினை மறக்கும் இளைஞர் அணி மோதுகிறது மூன்றாம் இடத்திற்கான போட்டியில் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து சண்டிலிப்பாய் எஸ்.பி. கே. அணி மோதவுள்ளது (சி)

---

# ஆத்மசாந்தி கிரியை அழைப்பிதழ்

அன்புடையீர்!

சென்ற 25-10-1991 வெள்ளிக்கிழமை சிவபதமடைந்த எமது தாயார்

## குமாரசாமி ஐயர் நீலாம்பாள் அம்மையாரின்

(புன்னாலைக்கட்டுவன்)

ஆத்மசாந்திக்கிரியை (தசாகம்) 03-11-91 ஞாயிறு மு. ப. 11 மணிக்கு நடைபெறும் இவ்வைபவத்தில் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு வேண்டுகின்றோம்.

நன்றி.


இங்ஙனம்,
மக்கள், மருமக்கள்.

சிவஸ்ரீ கு. ஜெகதீஸ்வரக்குருக்கள்,
மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி. (எ-1688)

---

"ஓம் விராட்விஸ்வப் பிரமனே நம"

# ஓர் ஆண்டு நினைவு



மலர்வு 24 - 11 - 1919
உதிர்வு 12 - 11 - 1990

## அமரர் குருசாமி சுப்பையா

திதி: (02-11-1991) ஐப்பசி மாத அபரபக்க ஏகாதசி

நீங்கள் ஏகி ஆண்டு ஒன்று
எம் நிலையில் மாற்றம் எத்தனையோ!
எனினும் எம் நெஞ்சில்
உங்கள் நினைவு நீங்கவில்லை.

தங்களது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்;
மனைவி, மக்கள், பெருமக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளை.

"செல்வபதி"
சந்தை வீதி, உடுப்பிட்டி. (சி-5558)

---

# 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



## சந்தியா செபஸ்ரி பிரான்சிஸ்

(பிரபல சட்டத்தரணியும்-சமாதான நீதவானும் யாழ். மரணவிசாரணை அதிகாரியும்)

பிறப்பு: 03-04-1931
இறப்பு: 02-11-1990

அன்பின் தெய்வமே, தாங்கள் எம்மை விட்டுப் பிரிந்து ஓராண்டு முடிவுற்றது. ஆனால் தங்கள் நினைவு நிழல் எம் உள்ளத்தில் பசுமையாக இருக்கின்றது. ஆண்டு ஒன்று சென்றாலும் தங்கள் அன்பின் அரவணைப்பை எம்மால் மறக்க முடியவில்லை. குடும்பத் தலைவராய், குடும்ப விளக்காயிருந்து எமது குடும்பத்துக்கு ஒளி தந்தீர்கள். ஓராண்டு சென்றாலும் உமது பசுமை நினைவுகள் என்றும் எமது நெஞ்சை விட்டகலாது.

அன்னாரின் ஆத்மசாந்திக்காக யாழ். அடைக்கல நாயகி ஆலயத்தில் 2-11-91ம் திகதி சனிக்கிழமை காலை 6 மணிக்கு ஒப்புக் கொடுக்கப்படும் இரங்கல் திருப்பலியில் பங்கு கொண்டு அன்னாரின் ஆத்மசாந்திக்காக மன்றாட வேண்டுகின்றோம்.

இவரின் பிரிவால் துயருற்று வருந்தும்;
மனைவி, மக்கள், மருமக்கள்,
சகோதரர்கள், பேரப்பிள்ளைகள்.

203, 2ம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம். (சி-5550)

---

# இன்று


(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண - நல்லூர்ப்பிரதேச சென் ஜோன் படைப்பிரிவு சகல உத்தியோகத்தர்களுக்கான கூட்டம் இன்று 2ம் திகதி சனிக்கிழமை மாலை 4 மணிக்கு யாழ் இந்துக் கல்லூரியில் நடைபெறுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (56)

---

# 31ம் நாள் நினைவஞ்சலி

பாசமுள்ள தந்தையென்று பாரோர் புகழ
எம்மை ஆளாக்கி வைத்து
எமது வாழ்வை நெறிப்படுத்திய அன்புத் தந்தை



மலர்வு 14 - 05 - 1927
உதிர்வு 03 - 10 - 1991

## அமரர் கணபதி செல்லத்துரை

அவர்களின்
அந்திமக் கிரியைகளிலும்
மற்றும்
அந்தியேட்டி - சபிண்டிகரணம்
போன்றவற்றிலும்
பங்குகொண்டு சிறப்புச்செய்த
உற்றார், உறவினர், நண்பர்கள்
யாவருக்கும்
எங்கள் தலையாய நன்றியும் வணக்கமும்.

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள். குடும்பத்தினர்.

பிடாரி கோவிலடி,
ஆனைக்கோட்டை. (சி-5552)

---

# 31-ஆம் நாள் நினைவஞ்சலி



## அமரர் திருமதி மணிமேகலை இராசலிங்கம்

| மலர்வு: | உதிர்வு: | திதி: |
| --- | --- | --- |
| 11-11-1940 | 04-10-1991 | 02-11-1991 |

எங்கள் இல்லத்தின் இணையில்லாத் தலைவியாய் விளங்கி, மனையும், சுற்றமும் பேணிக்காத்து, பாசமுடன் எம்மையெல்லாம் அரவணைத்து, புவிமீது வாழும் வழி அமைத்து, அன்பின் உறைவிடமாய், பண்பின் சிகரமாய் வாழ்ந்து, தோன்றாத்துணையாக, எம் நினைவுகளில் என்றென்றும் வாழும் எங்கள் பாசத் தெய்வத்தின் ஆத்மசாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் ஈமைக்கிரியைகளில் கலந்துகொண்டோருக்கும் மற்றும் எல்லாவழிகளிலும் உதவி நல்கியோருக்கும் நன்றிநவில்கின்றோம்.

அத்துடன் 02-11-1991 (இன்று) நடைபெறும் அந்தியேட்டி வைபவத்திலும் 03-11-1991 (நாளை) நடைபெறும் வீட்டுக்கிருத்திய வைபவத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் வேண்டுகின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்;
கணவன், மக்கள், மருகர்,
சகோதரர்கள், உறவினர்கள்.

தாளையடி ஒழுங்கை,
திருநெல்வேலி. (இ-5555)

# தொற்றுநோய் பரவுவதைத் தடுக்க மிகுந்த எச்சரிக்கையாக இருங்கள்

## செஞ்சிலுவைச் சங்கம் அறிவுறுத்து

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாடுபகுதியில் இன்று பல பகுதியிலுமிருந்து மக்கள் பெரும் தொகையாக இடம்பெயர்ந்து அகதிமுகாம் களிலும், மற்றும் உறவினர்கள், நண்பர்கள் வீடுகளிலும் தஞ்சமடைந்துள்ள இந்நேரத்தில் பலவிதமான தொற்று நோய்களுக்கும் அவர்கள் ஆளாக நேரிடலாம்.

சகல மக்களும் இந்நேரத்தில் சுகாதாரம் சம்பந்தமாக கவனிக்கப்படவேண்டிய முக்கிய விடயங்கள் குறித்து இலங்கை செஞ்சிலுவைச் சங்க பராமரிப்புப் பிரிவினர் வெளியிட்டுள்ள விபரங்கள் வருமாறு.

அகதிகளாகக் கூட்டமாக வாழும்போது உங்களது சுகாதாரம் பற்றி அக்கறை செலுத்தவேண்டிய விசேட காரணங்களுள்ளன.

வழமைக்கு மாறாக நீங்கள் ஒருவருக்கொருவர் நெருக்கமாக வாழ்கிறீர்கள். நோய் பரவிக்கொள்ளும் சந்தர்ப்பங்கள் இதனால் அதிகம் அத்தியாவசிய பொது வசதிகளான மலசலகூடம், நீர், உணவு என்பன எதிர்பார்க்கும் தரத்தில் இருக்காது. சில நபர்களின் பிழையான பழக்க வழக்கங்களால் உங்களுக்கும் நோய் பரவலாம், இதனால் எந்தவித தொற்று நோய்களும் சகல அகதிகள் மத்தியிலும் வேகமாகப் பரவலாம்.

வேகமாகப் பரவக் கூடிய நோய்கள் வருமாறு:

குடல் சார்ந்த நோய்களான வயிற்றோட்டம், வாந்திபேதி நெருப்புக்காய்ச்சல், மஞ்சட் காமாலை,

சுவாசம் தொடர்பான சளிச்சுரம், நெஞ்சுத்தடிமல், மற்றும் சுவாச அடைப்பு.

சொறி, சிரங்கு போன்ற சரும நோய்கள்

நுளம்பினால் பரவக்கூடிய மலேரியா, யானைக்கால், டெங்கு காய்ச்சல் மற்றும் மூளைக்காய்ச்சல் போன்றன.

நீங்கள் என்ன செய்யலாம்? நீங்கள் வதியும் இடத்தை துப்பரவாக வைத்திருக்க உங்களுக்குப் பெரும்பங்குண்டு.

அவசியமான மலசலகூடங்களை தற்காலிகமாகவோ அல்லது நிரந்தரமாகவோ அமைக்க உதவி செய்யுங்கள். மலசல கூடங்களை மற்றவர்களும் பாவிக்கக்கூடியதாக இயன்ற அளவு துப்பரவாக வைத்திருங்கள். வெளியான இடங்களில் மலசலம் கழிப்பதைத் தவிர்த்துக்கொள்ளுங்கள்.

கிணறு, குளம், ஆறு போன்ற தண்ணீர் பெறும் இடங்களை அசுத்தப்படுத்தாதீர்கள். குடிப்பதற்கான நீரை சுத்தமான இடங்களிலிருந்தும் சுத்தமான பாத்திரங்களை பாவித்து பெற்றுக்கொள்ளுங்கள் நீரை கொதிக்கவைப்பதன் மூலம் கிருமிகளை அழிக்கலாம்.

உணவை முடிந்தளவு சுத்தமான முறையில் தயாரித்துக் கொள்ளுங்கள் இலையான்கள் பெருகக்கூடிய குப்பை கூளங்களை கிடங்குவெட்டிப் புதையுங்கள்.

நுளம்புகள் உண்டாகாத வண்ணம் நீர் தேங்கி இருக்கும் இடங்களை அழித்து விடுங்கள். உணவு உட்கொள்ள முன்னும் உணவை தயாரிக்க முன்னும் மலசலகூடம் போய் வந்த பின்னும் கைகளை சவர்க்காரம் போட்டு நன்றாகக் கழுவிக்கொள்ளுங்கள்.

நீங்கள் தங்கியிருக்கும் இடத்தில் யாருக்காவது ஏதேனும் நோய் இருந்தால் உடனேயே சுகாதாரப் பகுதி அதிகாரிகளுக்கு அறிவியுங்கள். (56)

## மூதல்வர் ஜெயலலிதாவுக்கு அமைச்சர் பாராட்டு

(சென்னை)

தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதாவை இந்தியப் பாதுகாப்பு இணையமைச்சர் திரு. கிருஷ்ணகுமார் வெகுவாகப் பாராட்டியுள்ளார்.

தமிழகத்தில் விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த, செல்வி ஜெயலலிதா மேற்கொண்ட நடவடிக்கைகளுக்காகவே அவருக்கு இப்பாராட்டு வழங்கப்பட்டது.

ஜெயலலிதாவின் நடவடிக்கைக்கு மத்திய அரசு தொடர்ந்தும் ஆதரவு வழங்குமென்றும் அமைச்சர் கிருஷ்ணகுமார் தெரிவித்துள்ளார். (சி)


## பூப்புனித நீராட்டுவிழா அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் பிரசோற்பத்தி வருடம் ஐப்பசி மாதம் 17-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை (03-11-91) காலை 9-04 மணி முதல் 10 34 மணி வரையுள்ள சுபமுகூர்த்தத்தில்,

எமது சிரேஷ்ட புத்திரி
இருநிறைச் செல்வி
★ சுபா ★
அவர்களுக்கு

பூப்புனித நீராட்டு விழா நடாத்த நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் சுற்றம் சூழ வருகை தந்து செல்வியை ஆசீர்வதித்து மகிழ்விக்கும் வண்ணம் அன்புடன் வேண்டுகின்றோம்.

தங்கள் நல்வரவை நாடும்!
சி. சுந்தரலிங்கம் (ஈழத்தீபன்)
(ஆசிரியர் - பிரபல பத்திரிகையாளர்)
சு. பாரததேவி

"தேவி இல்லம்",
பத்தியவத்தை,
வதிரி மேற்கு,
கரவெட்டி.

(ஏ-1690)


## 6-வது தொடர் உணவு முத்திரைகள் வழங்க நடவடிக்கை

(சித்தன்கேணி)

சங்கானை உதவி அரசாங்க அதிபர் பிரிவில், வறுமை நிவாரணத்தின் 6வது தொடர் உணவு முத்திரைகளை விரைவில் வழங்குவதற்கு உதவி அரசாங்க அதிபர் திரு. து. வைத்திலிங்கம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

இப்பகுதியில் 5வது தொடர் வறுமை நிவாரண உணவு முத்திரைகள் உள்ள அனைவருக்கும் 6வது தொடர் வறுமை நிவாரண உணவு முத்திரைகளை விரைவில் வழங்கும் பணியில் அனைத்து உத்தியோகத்தர்களும் துரிதமாக ஈடுபட்டுள்ளனர். (137)

## தமிழ் இலக்கியக் கழகம்

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணத்தில் 'இறிஸ்தவ தமிழ் இலக்கியக் கழகம்' ஒன்று, நாளைக் காலை 10-00 மணிக்கு யாழ். அடைக்கல நாயகி தேவாலய வளவில் அமைந்துள்ள சென். ஜேம்ஸ் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையில் ஆரம்பித்துவைக்கப்பட உள்ளது. இதற்கான ஏற்பாடுகளைக் கவிஞர் பா சத்தியசீலன் மேற்கொண்டுள்ளார்.

## இலவச ஆங்கில பயிற்சி வகுப்பு

(காங்கேசன்துறை)

வலி. வடக்கு செஞ்சிலுவைச் சங்கக் கிளையினர் செஞ்சிலுவைத் தொண்டர்கள் பாடசாலை மாணவர்கள் ஆகியோரின் நலன் கருதி இலவச ஆங்கிலப் பயிற்சி வகுப்பு ஒன்றை நடாத்தி வருகின்றனர்.

மல்லாகத்திலுள்ள செஞ்சிலுவைச் சங்கக் கிளை அலுவலகத்தில் நடைபெறும் இந்த ஆங்கிலப் பயிற்சி வகுப்பில் ஏராளமானோர் கலந்து பயிற்சி பெறுகின்றனர்.

அத்துடன் செஞ்சிலுவைச் சங்கத் தொண்டர்களுக்கான தொண்டர் பயிற்சிகளும் இங்கு நடாத்தப்பட்டு வருகிறது. (86)


இராசி பலன்

02-11-1991
சனிக்கிழமை
(தமிழுக்கு ஐப்பசி 16)

ஏகாதசி மு. இ. 3.09வரை; பூரம் மு. இ. 6.25 வரை, இராகுகாலம் காலை 9.04 முதல் 10. 34 வரை; சுப நேரம் மாலை 3. 04, முதல் 434 வரை, சித்தயோகம்.

மேடம்:- அதிகாரம், தொழில் முடக்கம், மனக் குறை'

இடபம்:- அறிஞர் பகை, மனைவகாரம், குடும்பகலகம்

மிதுனம்; தொழில் லாபம், மனமகிழ்ச்சி, பயணம்.

கடகம்:- குடும்ப பகை, அலைச்சல், வைத்தியசெலவு.

சிங்கம்:- காரியசித்தி, போட்டிகளில் வெற்றி, புகழ்.

கன்னி:- நோய் உபாதை, காரிய தடை, வெறுப்பு.

துலாம்:- குடும்ப மகிழ்ச்சி, தொழில் முயற்சி, பணவரவு,

விருச்சிகம்:- இனசனவரவு சுபகாரியம், காரியசித்தி.

தனுசு:- தடுமாற்றம், குறைகேட்டல், பகைஉணர்வு,

மகரம்;- புத்திரர் கவலை, குடும்பவிவகாரம், யோசனை.

கும்பம்:- தொழில் பாராட்டு சகோதர பகை, தெய்வீக செலவு.

மீனம்: எதிர்பாராத செலவு உறவினர் நன்மை, தொழில் உயர்வு.

ஜோஸ்யர்


## ஆனையிறவு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பிலிருந்து வருகை தந்த ஏராளமான பிரயாணிகள் பெருஞ்சிரமத்தின் மத்தியில் வந்துகொண்டிருந்த சமயம் நேற்றுக்காலை 7-30 மணியளவில் ஆனையிறவு முகாமிலிருந்து இராணுவத்தினர் திடீரென ஷெல் தாக்குதல் மேற்கொண்டனர்.

ஷெல் தாக்குதலையடுத்து பிரயாணிகள் மிகவும் பதற்றமடைந்து தமது பிரயாணத்தினை பயப்பீதியுடன் மேற்கொண்டனர்.

இதன் காரணமாக இப்பகுதி ஊடான போக்குவரத்து சில மணிநேரம் ஸ்தம்பிதமடைந்ததாக கொழும்பிலிருந்து வந்தவர்கள் தெரிவித்தனர் (86)

## வைரவிழாவும் நினைவுவிழாவும்

(யாழ்ப்பாணம்)

இலக்கிய வித்தகர் புலவர் மணி ஏ பெரியதம்பிப்பிள்ளையின் பதின்மூன்றுவது நினைவு விழாவும் இலக்கியச் செம்மல் மகாவித்துவான் எவ். எக்ஸ். சி. நடராசாவின், வைரவிழாவும், புலவர்மணி நினைவுப் பணிமன்றத்தில் தலைவர் திரு. இரா. நாகலிங்கம் தலைமையில் இன்று 2-ம் திகதி சனிக்கிழமை முற்பகல் மட்டக்களப்பு மத்திய வீதி, சாளில் மண்டபத்தில் இடம் பெறவுள்ளன.

மகாவித்துவான் எவ். எக்ஸ். சி. நடராசாவைப் பாராட்டிப் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்க உள்ள இவ்விழாவில் "பாலைக்கலி" நூல் வெளியீடும் இடம் பெறவுள்ளது.

## மருந்து லொறிகள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கிறது.

இதனால் மருந்து வகைகள் மற்றும் பொருட்கள் லொறிகளில் ஏற்றப்பட்ட நிலையில் கொழும்பில் நிற்பதாக யாழ். போதனா வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (56)

## சபாநாயகருக்கு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தாசாவுக்கு எதிரான பிரேரணையை முதலில் ஏற்றுக் கொண்டு பின்னர் அதை நிராகரித்ததை எதிர்த்துச் சபாநாயகருக்கு எதிராக எதிர்க்கட்சிகள் இதற்கு முன்னர் நம்பிக்கையில்லாப் பிரேரணையை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தன.

இந்தப் பிரேரணை நாடாளுமன்றத்தில் தோல்வியுற்றது தெரிந்ததே.

இதன்பின்னர் எதிர்க்கட்சியினரின் பலத்த எதிர்ப்புகளுக்கு மத்தியில் சபாநாயகர் நாடாளுமன்ற கூட்டங்களை நடத்தி வந்தார்.

கடந்த அக்டோபர் மாதம் 23-ம் திகதி எதிர்க்கட்சியினரின் பலத்த எதிர்ப்புகளையும் பொருட்படுத்தாமல் 15 நிமிட இடைவெளிக்குள் 58 சட்ட மூலங்கள் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டன.

இதனை எதிர்த்தே எதிர்க்கட்சியினர் நேற்று முன்தினம் மற்றுமொரு நம்பிக்கையில்லாப் பிரேரணையை நாடாளுமன்ற செயலாளர் நாயகத்திடம் கையளித்தனர்.

## தெரிவுக்குழு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மேற்படி நாடாளுமன்றக்குழுவில் உறுப்பினர்கள் 43 பேர் அங்கம் வகிப்பார்கள் என்றும் இக்குழுவின் தலைவராக ஸ்ரீ. ல. சு. கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் திரு. லக்ஷ்மன் சில்வா கடமையாற்றுவாரென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

## கால்நடை பெருக்கத்தில் பெரும் வீழ்ச்சி

(கொழும்புத்துறை)

யாழ். மாவட்டத்தில் இராணுவ நடவடிக்கைகள் காரணமாக, கால்நடைகளின் பெருக்கம் பெருமளவு குறைந்துள்ளது. இதனால் குறை மாதத்தில் குட்டி ஈனும் சம்பவங்களும் அதிகரித்துள்ளன.

வைக்கோல், தவிடு, பிண்ணாக்கு மற்றும் கால்நடைத் தீன் வகைகளுக்குத் தட்டுப்பாடு நிலவுவதால், பால் சுரப்பதும் குறைந்துவருவதுடன், போஷாக்கு இன்மையால் கால்நடைகள் இலகுவில் நோய்வாய்ப்படுகின்றன என்றும்தெரிவிக்கப்படுகிறது (415)

## பரீட்சை ஆவணங்களை அனுப்புமாறு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

கல்விப் பொதுத் தராதர சாதாரண பரீட்சைக் குரிய விடை எழுதும் தாள்களையும் மற்றும் ஆவணங்களையும் கப்பல்மூலம் அனுப்பிவைக்குமாறு யாழ் கல்விப் பணிப்பாளர் இ. சுந்தரலிங்கம் பரீட்சை ஆணையாளரைக் கேட்டுள்ளார்.

க பொ. த. சாதாரண பரீட்சை பற்றிய ஒழுங்குகளை கொழும்பில் மேற்கொள்ள வேண்டியிருப்பதால்கொழும்பு வருவதற்கு போக்குவரத்து ஒழுங்குகளைச் செய்து தருமாறும் அவர் கேட்டுள்ளார். 154)

# பொட்டு அம்மானை சரணடைய உத்தரவு

(புதுடில்லி)

விடுதலைப்புலிகளின் முக்கியஸ்தர் 'பொட்டம்மான்' சரணடைய வேண்டுமென இந்திய நீதிமன்றமொன்று உத்தரவிட்டுள்ளதாம்.

முன்னாள் இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தியைக் கொலை செய்த சிவராசன், சுபா ஆகியோரை அனுப்பியதாக அவர் மீது குற்றம் சாட்டியே அவரைச் சரணடையுமாறு இந்திய நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளதாம்.

இத்தகவலை ராஜீவ் கொலை குறித்து விசாரணை நடாத்தி வரும் 'சி.ஐ' பொலிஸ் பிரிவு அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (சி)

# பல்கலைக்கழகத்தில் மாணவர் துன்புறுத்தலுக்கு தடை

(யாழ்ப்பாணம்)

யாழ் பல்கலைக்கழகத்தில் 1990-91ம் ஆண்டுக்குப் புதிய மாணவர்களை அனுமதிக்கும் இந்த நேரத்தில், புதிய மாணவர்களை சிரேஷ்ட மாணவர்கள் துன்புறுத்துவது அடியோடு தடைசெய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராசா பல்கலைக்கழகத்தில் படிக்கும் மாணவர்களுக்கு ஆலோசனை வழங்கும் முகமாக விடுத்த சுற்றறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் அந்தச் சுற்றறிக்கையில் குறிப்பிட்டுள்ளதாவது: "புதிய மாணவர்களிடம் பணம் சேர்ப்பது தடை செய்யப்பட்டுள்ளதுடன் ஒரு மாணவரை உளவியல் ரீதியாகவோ, உடலியல் ரீதியாகவோ பாதிப்படையும் வகையில் நடக்கக்கூடாது. சிரேஷ்ட மாணவர்கள் தமது சமூக பண்பாட்டுக் கடமைகள், பொறுப்புணர்வுகள் என்பவற்றை உணர்ந்து நடக்க முயல வேண்டும்" (152)

## தனிப்பீடம் அமைக்க ஒப்புதல்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகத்தில் வர்த்தகம், முகாமைத்துவத் துறைக்கும் தனிப்பீடம் அமைப்பதற்கு பல்கலைக்கழக பேரவையும், மூதவையும் ஒப்புதல் அளித்துள்ளன.

பல்கலைக்கழக மானியக் குழுவின் சிபாரிசு கிடைத்தவுடன் இத்தத்துறை கலைப்பீடத்தில் இருந்து விலகி தனியான பீடமாக அமைக்கப்படும் எனத் தெரியவருகிறது. [152]

## கூட்டம்

(கொழும்பு)

சார்க் நாடுகளின் வெளியுறவுச் செயலர்களின் கூட்டம் இன்று சனிக்கிழமை கொழும்பு பண்டாரநாயக்கா சர்வதேச ஞாபகார்த்த மண்டபத்தில் ஆரம்பமாகவுள்ளது. (வி)

## ஹெலிமூலம் துண்டுப்பிரசுரம்

(யாழ்ப்பாணம்)

யாழ் குடாநாடு முழுவதும் நேற்று நண்பகல் 2-45 மணியளவில் ஹெலிகொப்டர் மூலம் துண்டுப் பிரசுரங்கள் வீசப்பட்டன. (56)

## கட்டாக்காலி நாய்களை அழிக்கும் தினம்!

(மண்டைதீவு)

ஒவ்வொரு மாதமும் 29-ந் திகதியன்று கட்டாக்காலி நாய்களை அழிக்கும் நாளாக செயற்பட வேண்டும் என்று யாழ். பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் தமது பிரிவிலுள்ள சகல சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகங்களுக்கும் அனுப்பி வைத்துள்ள சுற்றறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார். இதன்பிரகாரம் பொது சுகாதார பரிசோதகர் ஒவ்வொரு மாதமும் 29-ந் திகதியன்று தத்தமது பகுதிகளில் கட்டாக்காலி நாய்களை அழிக்கும் பணியில் ஈடுபடுவார்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது. (72)

# டிக்ஸிற் வெளியுறவு செயலராக நியமனம்

(புதுடில்லி)

பாகிஸ்தானில் இந்தியத் தூதுவராக கடமையாற்றும் திரு. ஜே. என். டிக்ஸிற் இந்திய வெளியுறவுச் செயலராக நியமிக்கப்பட்டுள்ளார்.

முன்பு இவர் இலங்கையில் இந்தியத் தூதுவராகக் கடமையாற்றியவர் என்பதும் இலங்கை-இந்திய ஒப்பந்த விவகாரத்தில் இவர் முக்கிய பங்கேற்றதும் குறிப்பிடத்தக்கது.

தற்போதுள்ள இந்தியவெளியுறவுச் செயலாளர் திரு முஷ்குந்த் துபே இம்மாதம் 30-ம் திகதி ஓய்வுபெறுவதையடுத்தே திரு. டிக்ஸிற் புதிய வெளியுறவுச் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

பங்களாதேசம், பூட்டான், ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளிலும் திரு. டிக்ஸிற் இந்தியத் தூதுவராக பணியாற்றியுள்ளார்.

## இன்று

(பருத்தித்துறை)

பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள 35 கிராமசேவை அலுவலர் பிரிவுகளினதும், கிராமிய பாவனையாளர் பாதுகாப்புக்குழு உறுப்பினர்களையும் இன்று சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரியில் சமூகமளிக்கும்படி பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபரும், பிரதேச சபை விசேட ஆணையாளருமான திரு: செல்வ: ஸ்ரீனிவாசன் வேண்டுகோள் விடுத்துள்ளார். [52]

## இரு அமைச்சர்கள்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

சுகாதார மகளிர் விவகார அமைச்சர் திருமதி ரேணுகா ஹேரத், புனர்வாழ்வு புனர்நிர்மாணத்துறை அமைச்சர் திரு பி. தயாரத்ன ஆகியோரே அந்த இரு அமைச்சர்களுமாவார்.

மட்டு. மாவட்டத்தில் சுகாதார சேவைகள் குறித்தும் மட்டக்களப்பு எம். பி.க்களுடன் இவர்கள் ஆலோசனைகளை நடத்தவுள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்ட எம். பி. திரு. யோசப் பரராஜசிங்கம் இதுசம்பந்தமான ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளார். (56)

## தீபாவளியைமுன்னிட்டு பொது மன்னிப்பு

(கொழும்பு)

தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு 1,500 கைதிகளுக்கு ஜனாதிபதி பிரேமதாஸா பொதுமன்னிப்பு வழங்கியுள்ளார்.

நீதியமைச்சர் ஏ. சி. எஸ். ஹமீதின் பரிந்துரையின்படியே கைதிகளுக்கு பொதுமன்னிப்பு வழங்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

மரணதண்டனை விதிக்கப்பட்ட கைதிகளுக்கு ஆயுள்தண்டனைக் குறைப்பும் வழங்கப்படும். (வ

## மெய்கண்டதேவர் நினைவுப் பேருரை

(யாழ்ப்பாணம்)

மெய்கண்டதேவர் நினைவுப் பேருரை, இன்று 2ம் திகதி சனிக்கிழமை காலை யாழ். ஆரிய இந்துப் பாடசாலையில் யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைத் தலைவர் திருமதி நா. செல்வநாயகம் தலைமையில் நடைபெறும்.

சைவப் புலவர் திரு க. இ. குலரத்தினம் பேருரை வழங்குவார். விரிவுரையாளர் திரு: ப. கணேசலிங்கம் பாராட்டுரை வழங்குவார், சைவப் புலவர் திரு. மு. திருஞானசம்பந்தப்பிள்ளை வரவேற்புரை வழங்குவார்.

## இராணுவ தளபதி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வும் மோட்டிவிட்டதும் இது குறித்து முன்னர் சர்ச்சை ஏற்பட்டதும் குறிப்பிடத்தக்கது. (சி)

## மட்டு அம்பாறை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

விரோதக் கும்பல்களினாலும் அடித்து விரட்டப்பட்டதனால் மக்கள் தற்போது தங்கள் பாதுகாப்பைத் தேடிக் காடுகளில் தஞ்சம் புகுந்துள்ளார்கள்.

காடுகளில் தஞ்சமடைந்துள்ள தமிழ் மக்கள் போதிய உணவு ஏதுமின்றிப் பெரும் கஷ்டத்துக்குள்ளாகி வருகின்றார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது. (வி)

## பாணின்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

குறையாமலிருக்க வேண்டுமெனவும் யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம் தீர்மானித்துள்ளது.

தற்போதைய இக்கட்டான நிலைமை கருத்திற்கொண்டே மேற்படி முடிவு எடுக்கப்பட்டதாக பேக்கரி உரிமையாளர் சங்கம் தெரிவித்துள்ளது. (அ)

## அராலி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பகுதிகளில் உள்ள பொதுமக்களின் உடைமைகளுக்கு பலத்த சேதமேற்பட்டதுடன் பெரும்பாலான பொதுமக்கள் அப்பகுதியிலிருந்து இடம்பெயர்ந்துமுள்ளனர். (வி)

## அடகு நகை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கள் வங்கிக்கிளையில் விசேடபிரிவொன்று திறக்கப்பட்டுள்ளது.

வடபகுதியில் கடமையாற்றிய வங்கி ஊழியர்களின் மேற்பார்வையில் அடகு நகைகள் மீளளிக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (வி)

# மண்ணெண்ணை முத்திரை வழங்குமாறு கோரிக்கை

(சித்தன்கேணி)

புதிய உணவு முத்திரைகள் வழங்கும்போது மண்ணெண்ணை முத்திரையும் வழங்குமாறு உணவு முத்திரைகள் பெறும் குடும்பங்கள் வேண்டுகோள் விடுத்துள்ளன.

யாழ். மாவட்டத்தில் 5வது தொடர் உணவு முத்திரையுள்ள குடும்பங்களுள் நூற்றுக்கணக்கான குடும்பங்களுக்கு மின்சாரம் இருக்கிறது என்ற காரணத்தினால் முன்னர் அவ்வப் பகுதி கிராம சேவை அலுவலர்களினால் மண்ணெண்ணை முத்திரைகள் வழங்கப்படவில்லை.

தற்போதைய சூழ்நிலையில் மின்சாரம் இல்லாமையினால் உணவு முத்திரை பெறும் குடும்பங்கள் தங்களுக்கு மண்ணெண்ணை முத்திரை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கிராமசேவை அலுவலர்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளன.

யாழ். மாவட்டத்திலுள்ள உணவு முத்திரைபெறும் குடும்பங்களுக்கு 6வது தொடர் வறுமை நிவாரண உணவு முத்திரைகள் விரைவில் வழங்கப்படவுள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கது. [137]

# தெ. ஆபிரிக்க கிரிக்கெட் அணி இந்தியா விஜயம்

(புதுடில்லி)

இந்திய கிரிக்கெட் அணியை இலங்கை வருமாறு இலங்கை விடுத்த வேண்டுகோளை ஏற்றுக் கொள்ளாத இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை தெ. ஆபிரிக்க அணியை அழைத்துள்ளது.

இதையடுத்து இம்மாத நடுப்பகுதியில் அல்லது பிற்பகுதியில் தெ. ஆபிரிக்க அணி இந்தியாவில் சர்வதேச ஒருநாள் போட்டியில் 25 வருடங்களின் பின் முதல் தடவையாக கலந்துகொள்ள வரவுள்ளது.

பாகிஸ்தான் அணி தனது இந்திய விஜயத்தை ரத்துச் செய்ததை அடுத்தே இந்த ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளது. (சி)

## முப்படையினர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

லும் தற்போது விதித் தடைகள் போடப்பட்டுப் பலத்த சோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. (சி)

மீண்டும் ஒரு
விலை குறைப்பு
பாணின் விலை ரூபா 7-50 நிறை 350 Gram

தற்போதைய நெருக்கடி நிலையை கருத்திற்கொண்டு இன்று முதல் (2-11-91) பாணின் விலை ரூபா 7-50 ஆகவும் நிறை 350 Gram ஆகவும் இருக்கவேண்டுமென எமது சங்கம் தீர்மானித்துள்ளது. ஆகவே இதை மீறும் பேக்கரி உரிமையாளர்களுக்கு மா விநியோகம் நிறுத்தப்படும். இதை மீறும் பாண் விற்பனையாளருக்கு பாண் விநியோகம் நிறுத்தப்படும். பாணின் விலை, நிறை, தரம் ஆகிய குறைபாடுகளை பொதுமக்கள் எமக்கு எழுதவும்.

யாழ். மாவட்ட
பேக்கரி உரிமையாளர் சங்கம்.
இல. 3, பஸ்தியன் சந்தி, யாழ்ப்பாணம்.
(சி-5557)

மரண அறிவித்தல்

பி. தியாகராஜன்

குடத்தனையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், திக்கம் ரத்னா ஸ்ரோர்ஸ் உரிமையாளரும், வீரகேசரி, ஈழநாடு முகவரும் முன்னாள் அநுராதபுரம் ஜெயகேசன் அன் கோ பங்காளரும், பிரபல முறிவு வைத்தியருமான பி. தியாகராஜன் காலமானார். அன்னார் இரத்தினத்தின் அன்புக் கணவரும், தேவரஞ்சினியின் அருமைத் தந்தையும், க. இராசசேகரனின் அன்பு மாமனாரும், திருமகள், தனுஷா, ஜெயபாரதி ஆகியோரின் பேரனுமாவார். இறுதிச்சடங்குகள் வியாழக்கிழமை நடைபெற்றது. உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

மருமகன்
இராசகோபால்

திக்கம்,
அல்வாய் மேற்கு, அல்வாய். (ஏ-1691)

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 62-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1991-ம் ஆண்டு நவம்பர் மாதம் 2-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registred as a News Paper at the General Post Office Sri Lanka under Licence Number B/10336/31.